யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, யூன் - 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | நாடகமும் அரங்கியலும் II | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர் பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்து ஒப்படைக்க.
பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.**
**இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குச் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

1) ஈஸ்கிலசின் முக்கூட்டு நாடக எழுத்துருக்களில் ஒன்று
   1) ஆகமென்னன் 2) அன்ட்ரோமச்சி 3) ஹெலன்
   4) ஈடிப்பஸ் அற்கொலனஸ் 5) மெடியா (..............)

2) சேக்ஸ்பியரின் நாடக எழுத்துருக்களில் காணப்பெறாத அம்சங்களில் ஒன்று
   1) புறச் சொல் 2) வெற்றுக் கவிதை 3) உரைஞர்
   4) தனிக்கூற்று 5) நாடக முரணணி (..............)

3) திருக்குற்றாலக் குறவஞ்சி நாடகத்திலே வரும் குளுவ நாடகப் பகுதி குறிப்பது
   1) குற்றாலநாதர் - வசந்தவல்லி ஊடாட்டம்
   2) திருக்குற்றாலநாதர்- சிங்கி ஊடாட்டம்
   3) சிங்கன் - சிங்கி ஊடாட்டம்
   4) சிங்கன் - வசந்தவல்லி ஊடாட்டம்
   5) நுஃகன் - சிங்கி ஊடாட்டம் (..............)

4) 'அன்ரிக்கனி' நாடகத்தில் வரும் ஈடிப்பஸின் இரண்டு ஆண் பிள்ளைகள்
   1) அன்ரிகனி இசுமெனி 2) யூரிடிஸ் பொலினிசெஸ்
   3) ஈற்றோக்லிஸ் பொலினிசெஸ் 4) கிறயேன் ஏமன் 5) தைரீசியஸ் ஈற்றோக்லிஸ்
   (..............)

5) சிங்கள் நாடக மரபில் சொக்கரி என்பது
   1) தனியாட்டத்தை குறிப்பது 2) தெருவில் ஆடுவதை குறிப்பது
   3) மேடை நாடகத்தை குறிப்பது 4) அழகிய மாது என்பதைக் குறிப்பது
   5) பிற பிரதேச ஒருவரின் வருகையை குறிப்பது (..............)

6) நிருத்தம் என்ற பிரிவில்
   1) தாளக்கட்டுச் சொற்கள் மாத்திரமே இருக்கும்
   2) சொற்கட்டுகளும் பாடலும் சேர்ந்திருக்கும்
   3) முகபாவங்கள் மேலோங்கி நிற்கும்
   4) பாவம் கதை என்பன காணப்படும்
   5) பாவம் ராகம் தாளம் கொண்டதாக இருக்கும் (..............)

7) தமிழ் நாட்டு நாடக ஆசிரியர் வேலு சரவணனின் அரங்கு
   1) பெண்ணிய அரங்கு தொடர்பானது
   2) ஒடுக்கப்பட்டோர் அரங்கு தொடர்பானது
   3) பாரம்பரிய அரங்கு தொடர்பானது
   4) நவீன அரங்கு தொடர்பானது
   5) சிறுவர் அரங்கு தொடர்பானது (..............)

8) இலங்கைத் தமிழரங்க வரலாற்றில் சிறுவர் நாடகங்களை எழுதியவர்
   1) வேலைச்சரவணன் , சி. மௌனகுரு, சி. ஜேய்சங்கர்
   2) குழந்தை சண்முகலிங்கம் , சி. மௌனகுரு, சி. ஜெய்சங்கர்
   3) கலைச்செல்வன், சி. மௌனகுரு, வேலுச்சரவணன்
   4) குழந்தை சண்முகலிங்கம் , வேலுச்சரவணன் , சி. ஜெய்சங்கர்
   5) நா. சுந்தரலிங்கம், குழந்தை சண்முகலிங்கம், சி. மௌனகுரு (..............)

9) பின்வருவனவற்றுள் இசைநாடக முறையில் அமைந்த நாடகம்
   1) கோடை 2) உறவுகள் 3) சங்காரம்
   4) விளக்கும் விரல்களும் 5) கண்டனன் சீதையை (..............)

10) பின்வரும் தொகுதிகளில் யதார்த்த நாடகங்களை எழுதியோரின் பெயர்களை கொண்ட தொகுதி
   1) இப்சன், பிறொ.ஃட், செக்கோவ் 2) இப்சன், செக்கோவ், ஸ்றின்ட்பேர்க்
   3) பிறெ.ஃட், இப்சன் , எமிலிசோலா 4) செக்கோல், மோலியே, இப்சன்
   5) செக்கோவ், ஸ்ரொன்சிவில்லியம், பிறெ.ஃட் (..............)

11) 1970 களில் தமிழ் அரங்கில் நாடக அறிக்கைகளைக் காத்திரமாக மேற்கொண்டவர்கள்
   1) அ.தாசீசியஸ், நா. சுந்தரலிங்கம், சுஹைர் ஹமீத்
   2) நா. சுந்தரலிங்கம், இ. முருகையன், அ. தாசீசியஸ்
   3) அ. தாசீசியஸ், மஹாகவி, அம்பி
   4) இ. சிவானந்தன், நா. சுந்தரலிங்கம், மஹாகவி
   5) சுஹைர் ஹமீத், சிவானந்தன், அ. தாசீசியஸ் (..............)

12) பொம்மலாட்டத்தின் மூலம் கதை கூறும் ஜப்பானிய நாடக வடிவம்
   1) கோவாகா 2) கியோஜன் 3) நோஹ் (NOH)
   4) கபுக்கி 5) புன்றக்கு (..............)

13) இயற்பண்புவாத நாடகத்தின் முதல் நாடக ஆசிரியராக கருதப் பெறுபவர்
   1) அன்ரூ அன்ரொயின் 2) டேவிட் பொஸ்கோ 3) எமிலி சோலா
   4) அயனெஸ்கோ 5) இயூஜின் (..............)

14) சிலப்பதிகார கால அரங்குகளில் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் திரைகளின் தொகுதி
   1) ஒருமுக எழினி, வேதிகா, யவனிகா
   2) யவனிகா, வெட்டுத்திரை, பொருமுக எழினி
   3) கரந்துவரல் எழினி, பொருமுக எழினி, யவனிகா
   4) ஒருமுக எழினி, பொருமுக எழினி, சுரந்துவரல் எழினி
   5) பின்திரை, தொங்குதிரை, ஒருமுக எழினி (..............)

15) நாடகம் ஒன்றிற்கு காட்சி விதானிப்புச் செய்ய வேண்டுவதற்கான காரணிகளில் ஒன்றாக அமையாதது
   1) நாடகத்தின் கதையமைப்பைத் தெரியப்படுத்துதல்
   2) நாடகத்தில் வரும் பாத்திரங்களின் இயல்புகளைக் காட்டுதல்
   3) நாடகத்தில் வரும் பாத்திரங்களின் அசைவியக்கத்திற்கு உதவுதல்
   4) நாடகத்தின் வகை மோடி என்பவற்றைத் தெரியப்படுத்தல்
   5) நாடகத்தை பகட்டு ஆடம்பரமானதாகக் காட்டுதல் (..............)

16) நாடகம் மேடையேறும் போது நெறியாளர் ஒருவர்
   1) ஒளி ஒலிகளைக் கவனிக்க வேண்டும்
   2) காட்சி மாற்றங்களை செய்ய வேண்டும்
   3) ஒலி வாங்கிகளைக் கவனிக்க வேண்டும்
   4) எடுத்துரைப்பாளராக விளங்க வேண்டும்
   5) மேடையின் ஓரமாக நின்று அனைத்தையும் கவனிக்க வேண்டும் (..............)

17) வேடமுகம் என்பது
   1) நடிகரின் முகத்தை மறைப்பதற்குப் பயன்படும்
   2) சிரிப்பூட்டுவதற்குப் பயன்படும்
   3) ஆடை அணிகளுக்கு ஏற்றதாகப் பயன்படும்
   4) பாத்திரத்தின் இயல்பைக் காட்டுவதாகப் பயன்படும்
   5) விகாரத்தன்மையுடையதாகப் பயன்படும் (..............)

18) புத்தளிப்பு அரங்கில் நடிகர் தெரிவு பெரும்பாலும் நெறியாளரால்
   1) திறந்த தெரிவு மூலம் மேற்கொள்ளப்படும்
   2) மூடிய தெரிவு மூலம் மேற்கொள்ளப்படும்
   3) சல்லடைத் தெரிவு மூலம் மேற்கொள்ளப்படும்
   4) நியமத் தெரிவு மூலம் மேற்கொள்ளப்படும்
   5) விஷேட நுட்பங்கள் தெரிவு மூலம் மேற்கொள்ளப்படும் (.............)

19) எழுத்துரு ஒன்றினை நெறியாளர் ஒருவர் மேடையேற்றும் போது அவ் எழுத்துருவை அவர்
   1) விதானிப்புச் செய்பவராக காணப்படுவார்
   2) வியாக்கியானம் செய்பவராக காணப்படுவார்
   3) அப்படியே பிரதி செய்பவராக காணப்படுகிறார்
   4) சிற்சில மாற்றங்களை ஏற்படுத்துபவராக காணப்படுவார்
   5) முடிவை மாற்றுபவராக காணப்படுவார் (.............)

20) உயரமான ஒருவர் கட்டையான ஒரு பாத்திரத்தை ஏற்க வேண்டுமாயின் அவர் அணிய வேண்டியது
   1) நேர்கோடுகள் கொண்ட ஆடை   2) தனிநிறம் கொண்ட ஆடை
   3) குறுக்குக் கோடுகள் கொண்ட ஆடை   4) சதுரப் பெட்டிகள் கொண்ட ஆடை
   5) குறுக்கு நேர்கோடுகள் கொண்ட ஆடை (.............)

21) நாடகம் ஒன்றில் இசையின் பயன்பாடு எனக் கருதப்பட முடியாதது
   1) அது நாடகத்தின் பின்னனியைக் காட்டும்
   2) அது நாடகத்தின் உணர்வு நிலையைக் காட்டும்
   3) அது நாடகத்தின் சூழல் அமைவினைக் காட்டும்
   4) அது நாடகத்தின் காலம், நேரம் என்பவற்றைக் காட்டும்
   5) அது நாடகப் பாத்திரங்களின் கவர்ச்சி நிலையைக் காட்டும் (.............)

22) ஈழத்துத் தமிழ் ஒப்பனைக் கலைஞர்களுள் இடம் பெறாதவர்
   1) நா. சுந்தரலிங்கம்   2) திருநாவுக்கரசு (S.T. அரசு)   3) பெஞ்சமின்
   4) வி.எம். குகராஜா   5) ஸ்ரனிஸ்லஸ் (.............)

23) நாடகம் ஒன்றில் குரல், பாடல், சொல்லாடல் மூலம் கருத்தை புலப்படுத்துவது
   1) ஆங்கீக அபிநயம்   2) சாத்வீக அபிநயம்   3) வாச்சீக அபிநயம்
   4) ஆஹார்ய அபிநயம்   5) ஸ்தாயிராவ அபிநயம் (.............)

24) நாடகமொன்றில் எடுத்துச் சொல்லி (prompter) இன் பணியாக ஏற்றுக்கொள்ளக் கூடியது
   1) நாடகத்தின் காட்சிகளைக் கவனித்தல்
   2) பார்வையாளர்களிற்கு விளங்கப்படுத்துதல்
   3) ஒலியமைப்பினைக் கவனித்தல்
   4) உரையாடலை நடிகனுக்கு நினைவூட்டல்
   5) நெறியாளனுக்கு அருகிலிருந்து உதவுதல் (.............)

25) வாயு விளக்குகள் முதலில் பயன்படுத்தப்பட்ட அரங்கு
   1) கிரேக்க அரங்கு   2) லண்டன் அரங்கு   3) இத்தாலி அரங்கு
   4) ஜேர்மன் அரங்கு   5) மத்தியகால அரங்கு (.............)

26) குழந்தை ம. சண்முகலிங்கத்தின் கல்விப் பிரச்சனை சார்ந்த நாடகம்
   1) வேள்வித் தீ   2) உறவுகள்   3) அன்னையிட்ட தீ
   4) புமுவாய் மரமாகி   5) எந்தையும் தாயும் (.............)

27) அன்ரிக்கனி நாடகத்தில் இறை நீதிக்காக பாடுபடுபவர்
   1) கிரயோன்   2) இசுமணி   3) அன்ரிக்கனி
   4) ஜொகஸ்டா   5) ஏமன் (.............)

28) யூலியஸ் சீசரின் கொலை பற்றிக் கூறி உரோமையர்களை சீற்றம் கொண்டெழச் செய்தவன்
   1) புரூட்டஸ்   2) காசியஸ்   3) காஸ்க்கா
   4) லெப்பிடஸ்   5) மார்க் அன்ரனி (.............)

29) ஒத்தல்லோ நாடகத்தில் "கறுத்த ஆடு ஒன்று வெள்ளை ஆட்டை கூட்டிச்செல்கிறது" என குரல் கொடுத்த பாத்திரம்
   1) பிரபன்சியே   2) ஓதல்லே   3) காசியே
   4) இயாகோ   5) டெஸ்ரிமோனா (.............)

30) கிரேக்க அரங்கில் ":எக்கிகுளோமா" எனும் பொறி பயன்படுத்தப்படும் நோக்கம்
1) ஒளியின் வர்ணங்களை மாற்றியமைக்க
2) இறந்தவரின் உடலைக் காட்டுவதற்கு
3) உயரமாக நின்று உரையாடுவதற்கு
4) கோறசினரின் வருகைக்காக
5) செய்தியாளரின் வருகைக்காக (..............)

31) சீன அரங்கில் பாவிக்கப்படும் அரங்கப் பொருட்களின் தொகுதி எது?
1) மேசை, தட்டுமுட்டு, காட்சித்திரை
2) காட்சித்தட்டிகள், திரைகள், மேசை
3) சில நிறப் பொருட்கள், காட்சித்திரைகள்
4) மேசை, கதிரை, சிலநிறப் பொருட்கள்
5) மேசை, கதிரை, உயர வேறுபாட்டு குற்றிகள் (..............)

32) கபுக்கி நாடக மரபில் வரும் "மியே" (ஆயை) எனும் செயல் நிகழ்வு
1) ஆட்ட இடை நிகழ்வு 2) விசேட ஆட்ட நிகழ்வு 3) பிரதான நடிகரின் வரவு
4) துணைநடிகர் வரவு 5) நடிகர்களை கௌரவித்தல் (..............)

33) உடற்பொறிமுறைக் கோட்பாட்டை நடிப்புச் செயற்பாட்டிற்காக முன்வைத்தவர்
1) ஸ்ரனிஸ்லவெஸ்கி 2) அன்ரோ அன்ரோயின் 3) குறொட்டோவ்ஸ்கி
4) மேயர் ஹோல்ட் 5) பீற்றர் புறுக் (..............)

34) கிரேக்க அரங்கில் ஹிப்போகிரட்டீஸ் என அழைக்கப்படுபவர்
1) நடிகர் 2) நெறியாளர் 3) நாடக ஆசிரியர்
4) கோரஸ் தலைவன் 5) நிதி வழங்குவோர் (..............)

35) பேட்டோல்ற் பிறெ்ஃற் தனது காவிய அரங்கில் பயன்படுத்திய உத்திகளில் ஒன்று
1) காவிய பாணிக் கட்டமைப்பு 2) தொலைப்படுத்தல் 3) அடையாளப்படுத்தல்
4) வரலாற்றாக்கல் 5) உரைஞரைப் பயன்படுத்தல் (..............)

36) ஜேம்ஸ் தொம்ஸன் அவர்கள் முன்வைத்த நாடக மரபு
1) காவிய அரங்கு
2) விவாத அரங்கு
3) பிரயோக அரங்கு
4) கண்ணுக்கு தெரியாத அரங்கு
5) சிறைக்கைதிகளுக்கான அரங்கு (..............)

37) "என்ன கெடுகாலமோ எனக்குத் தெரியது முந்தி எப்பவும் நடக்காத ஒரு பெரிய காரியம் எனக்கிப்ப நடந்து போச்சு" இக் கூற்றுக்குரிய பாத்திரம்
1) அருணர் 2) தியாகர் 3) பொதுவர்
4) சிவாயர் 5) புறொபெசர் (..............)

38) யூலியஸ் சீசர் நாடகத்தில் வரும் பின்வரும் உரையாடலைக் கவனித்து கீழ்வரும் வினாவிற்கு விடை தருக
A - என்ன கூச்சல்? இந்நகர் மக்கள் சீஸரை மன்னனாய் தெரிவு செய்தனரோ
B - அஞ்சுகிறாயா? அவனே மன்னனால் வருவதில் உனக்கு வருப்பம் இல்லையா?
C - சீஸரின் அன்பன் நான் ஆயினும் அவனே மன்னன் ஆவதை விரும்பவில்லை
1) புறுட்டஸ், கயஸ்கா 2) மார்க் அன்ரனி, லெப்பிடஸ் 3) புறுட்டஸ், சின்னா
4) காஸ்கோ, காசியஸ் 5) புறுட்டஸ், கசியஸ் (..............)

39) அவைக்காற்றுகைக் கலைக்கழகம் உருவாக்கம் பெற்ற ஆண்டு
1) 1970 2) 1975 3) 1979
4) 1980 5) 1983 (..............)

40) ஈழத்தில் எண்பதுகளில் (1980) ஆற்றுகை செய்யப்பட்ட தெருவெளி நாடகம்
1) மண்சுமந்த மேனியர் 2) மாயமான் 3) விடுதலை வேட்கை
4) லாலுக்குப் பாலகன் 5) ஒற்றுமையின் சின்னம் (..............)

❖ **பகுதி II இல் பிரிவு A லிருந்து இரண்டு வினாக்களையும் பிரிவு B யிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்து நான்கு வினாக்களிற்கு விடை தருக**

## பகுதி II

### பிரிவு A

**1)** கதைகூறுதல் எடுத்துரப்பு பண்புகளை திருக்குற்றாலக் குறவஞ்சி நாடகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

1. திருக்குற்றாலக் குறவஞ்சி நாடகத்தின் கட்டமைப்பை கூறுக. (5 புள்ளி)
2. இந் நாடகத்தின் ஊடாக வெளிப்படும் எடுத்துரைப்பு அரங்கின் அரங்கியல் உத்திகள் எவை? (5 புள்ளி)
3. திருக்குற்றால குறவஞ்சியில் இடம் பெறும் பெருங்காட்சிப் பண்புகளை உதாரணத்துடன் விளக்குக. (5 புள்ளி)

**2)** அன்ரிக்கனி நாடகம் உலகப் பிரசித்தி பெற்ற அவல நாடகம்

1. அன்ரிக்கனி நாடகத்தின் பிரதான மோதுகை யாது? (5 புள்ளி)
2. இந் நாடகத்தில் எவ்வாறு அவலம் வளர்த்தெடுக்கப்படுகிறது? (5 புள்ளி)
3. அன்ரிக்கனி ஏமன் கிரையன் ஆகிய பாத்திரங்களின் இயல்புகளை விளக்குக. (5 புள்ளி)

**3)**
1. அபத்த நாடகம் என்றால் என்ன? அவற்றின் பண்புகள் யாவை? (5 புள்ளி)
2. அபத்த நாடகத்தில் வரும் மூன்று பாத்திரங்களின் பண்புகளை விளக்குக. (5 புள்ளி)
3. அபத்த நாடக இயல்பு அபசுரத்தில் வெளிப்படுகிறதா? விளக்குக. (5 புள்ளி)

### பிரிவு B

**4)** 1970 களின் பிற்பகுதியில் பங்காற்றிய அரங்க நிறுவனங்கள் நாடக வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றின.

1. திருமறைக்கலா மன்றம் (5 புள்ளி)
2. நடிகர் ஒன்றியம் (5 புள்ளி)
3. நாடக அரங்க கல்லூரி (5 புள்ளி)

**5)**
1. இலங்கையில் பாரம்பரியமாக தமிழ்கூத்து நிகழ்த்தப்படும் பிரதேசங்களையும் கூத்தின் வகைகளையும் பட்டியற்படுத்துக. (5 புள்ளி)
2. “கூத்து வடிவங்கள் தனித்துவமான அழகியல் அம்சங்களைக் கொண்டவை என்பர்” அதன் அழகியல் பண்புகளை விபரிக்குக. (5 புள்ளி)
4. கூத்து சமுகத்தை ஒன்றிணைக்கும் சாத்தியப்பாடுகளைக் கொண்ட வடிவம் என்பதை விபரித்துக் கூறுக. (5 புள்ளி)

**6)** தமிழர் - சிங்களவர் மரபுவழி நாடகங்களிடையே குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் காணப்படுகின்றன பின்வருவனவற்றை ஒப்பிட்டு விளக்குக.

1. வசந்தன் கூத்து - கோலம் நாடகம் (5 புள்ளி)
2. மகிடிக் கூத்து - சொக்கரி நாடகம் (5 புள்ளி)
3. தமிழ்க் கூத்து - சிங்கள் நாடகம் (5 புள்ளி)